





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 22.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்








## தமிழக நிகழ்வுகள்

- பேரிடர் மேலாண்மை தொடர்பான தரவுகளை இணைத்து குறிப்பிட்ட பகுதிகளில் வெள்ள எச்சரிக்கைகளை வழங்குவதற்காகவும், பேரிடர் மேலாண்மைக்கான மதிப்பீட்டிற்காகவும், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமானது TN-ஸ்மார்ட்(Smart) என்ற செயலியை அறிமுகப்படுத்த உள்ளது.
  - தமிழ்நாட்டின் பல்வகை அபாய பாதிப்பு தாக்க மதிப்பீடு மற்றும் அவசரகால செயல்பாட்டு கண்காணிப்பு (Tamil Nadu – System for Multi-hazard Potential Impact Assessment and Emergency Response Tracking) என்பதன் சுருக்கமே TN-ஸ்மார்ட் (smart) ஆகும்.

## இந்திய நிகழ்வுகள்

- **ஸ்வச் - தாரா(Swatch Dhara) :** ஆந்திர பிரதேசம் மாநிலம் முழுவதும் தூய குடிநீரை வழங்கும் நோக்கத்துடன் அம்மாநில அரசானது **Swatch – Dhara (ஸ்வச் - தாரா)** என்னும் திட்டத்தை தொடங்கியுள்ளது.
  - இத்திட்டத்தின் மூலம், வழங்கப்படும் குடிநீர் ஆறு படிநிலைகளில் தூய்மைபடுத்தப்பட்டு **UV-கதிர்கள் மூலம் பாக்டீரிய** அழிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

- மகளிர் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இரண்டு புதிய இணையதளங்கள் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்துள்ளார்.
  - குழந்தைகளை ஆபாசமாக காட்டுவது, குழந்தைகளை பாலியல் ரீதியாக துன்புறுத்துவது, கூட்டு பாலியல் பலாத்காரம் தொடர்பான பாலியல் தகவல்களுக்கு எதிராக

**Cybercrime.gov.in** என்ற இணையதளத்தில் புகார்களை தெரிவிக்கலாம்.
- ○ பாலியல் குற்றங்களை கண்காணிப்பது மற்றும் அது தொடர்பான விசாரணைக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டது. பாலியல் குற்றச் செயலில் ஈடுபடுவர்கள் தொடர்பான தேசிய புள்ளிவிவர இணையதளம் போன்றவற்றை வெளியிட்டுள்ளார்.

- இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள இந்தியா உட்பட 21 கடலோரப் பகுதி நாடுகள் இணைந்து **IORA (Indian Ocean Rim Association)** என்னும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த அமைப்பின் சார்பில் புதுப்பிக்கத்தக்க **எரிசக்தி தொடர்பான கருத்தரங்கம்** அக்டோபர் 2-ம் நாள் புதுடெல்லியில் நடைபெற உள்ளது.
  - ○ சர்வதேச அளவில் இரண்டாவது முறையாக நடைபெறும் இந்த கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குத்தரஸ் மற்றும் பிறநாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.
  - ○ இதற்காக நான்கு நாள் பயணமாக ஐ.நா. பொது சபையின் பொதுச் செயலாளர் அன்ட்டோனியோ குட்டரஸ் அக்டோபர் 1-ம் தேதி இந்தியா வரவுள்ளார்.

- தனிநபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சில முக்கிய துறைகளில் தொழில் தொடங்குவதற்கு பாதுகாப்பு அனுமதி பெறுவதை எளிதாக்குவதற்காக மத்திய உள்துறை அமைச்சகமானது (MHA – **Ministry of Home Affairs**), இ-சஹாரஜ் **(e-Sharjah)** என்ற தளத்தை தொடங்கியுள்ளது.
  - ○ இந்த ஆன்லைன் தளமானது பாதுகாப்பு ஒப்புதல் செயல்முறைகளை நிலைப்படுத்தப்பட்டதாகவும், வேகமாகவும், வெளிப்படையாகவும் மற்றும் கண்காணிப்பை எளிதாகவும் மாற்றுகிறது.

## உலக நிகழ்வுகள்

- பொறுப்பான, நிலையான மற்றும் உலகளாவிய அளவில் அணுகக்கூடிய சுற்றுலாத் தன்மையை மேம்படுத்துதலை பணியாகக் கொண்ட UNWTO -இன் **(United Nations World Tourism Organization) 7-வது உலகளாவிய நகர்புற சுற்றுலா உச்சி மாநாடு தென்கொரியாவின்** தலைநகரான சியோலில் நடைபெற்றது.

- ஜப்பான் ஆளுங்கட்சி தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள **ஷன்சோ அபே** மூன்றாவது முறையாக அந்நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- இதில், மொத்தமுள்ள 807 வாக்குகளில் ஷின்சோ அபே 553 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார். இதன் மூலம் ஜப்பானில் நீண்டகாலம் பிரதமர் பதவி வகித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்

We Shine Academy™

## விருதுகள்

- நிலம், கடல் மற்றும் காற்று ஆகியவற்றில் வீரச்செயல் புரிந்தவர்களுக்காக வழங்கப்படும் உயரிய விருதான டென்ஜிங் நார்கே விருது **(Tenzing Norgay Award) INSV – தாரனியின் அனைத்து மகளிர் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.**
    - உலகம் முழுவதும் எட்டு மாத கால அளவிற்கு மேற்கொண்ட கடல் பயணத்திற்காகவும் சாதகமற்ற நீரல் நீடித்த அவர்களின் திறனுக்காகவும் இக்குழுவிற்கு அவ்விருது வழங்கப்பட்டது.

- குறிப்பு:

○ 72-வது சுதந்திர தினத்தில் இக்குழுவினர் **நாவ் சேனா Nav Sena Medal** விருதைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- **World Peace Day – 2018** (உலக அமைதி தினம் - செப்டம்பர் 21)
  - உலக நாடுகளில் உள்ள மக்களிடையே சமாதானத்தைப் (அமைதி) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 21-ஆம் நாள் உலக அமைதி தினம், ஐ.நா. பொதுச்சபையால் அனுசரிக்கப்படுகிறது.
  - மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனத்தின் 70-வது ஆண்டு நிறைவை கொண்டாடும் விதமாக இத்தினத்தின் கருத்துருவாக **(Theme - 2018 : "The Right to Peace – The Universal Declaration of Human Rights at 70")** என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

We Shine Academy™